# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,902—1970 අප්‍රේල් 17 වැනි සිකුරාදා—1970.4.17

14,902 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு எப்பிறல் மாதம் 17 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)—பொது

[ஒவ்வோரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| மகாதேசாதிபதியின் பிரகடனம் .. .. | — | விலைக்கட்டளைகள் .. .. .. | — |
| மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும் .. | 259 | இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் .. | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் .. .. | — |
| நீதிச் சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் .. | — | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. .. | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் .. .. | — | அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் .. | 262 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் .. .. | — | மாஜுமிகளுக்கு அறிவித்தல்கள் .. .. | — |
| அரசாங்க அறிவித்தல்கள் .. .. .. | 259 | "மதுவரிச் சட்ட" அறிவித்தல்கள் .. .. | — |


## மகாதேசாதிபதியின் நியமனங்களும் பிறவும்

1970 இன் இல. 135

எண். டி. 22/ஆர்ஈசிரி/143

### இலங்கை அரச கடற்படை அதி உத்தமராம் மகா தேசாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட இளைப்பாறல்

கீழ்க்குறிப்பிடப்பெற்ற அலுவலர் 1970, எப்பிரில் மாதம் 16 ஆம் திகதியிலிருந்து இலங்கை அரச கடற்படையின் நிரந்தரக் கடற்படையிலிருந்து இளைப்பாறுகிறார் :—

லெவ்ரினன்ற்-கொமாண்டர் (எஸ்.) டி. பீ. சி. மெக், இலங். அ. க.

அதி உத்தமனுரின் ஆணைப்படி,

ஜி. வி. பி. சமரசிங்க,
நிரந்தரச் செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரில் மீ 7 ந உ.

4–552

## அரசாங்க அறிவித்தல்கள்

எல். டீ. பீ. 7/63

### 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம் 6 (1) (V) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1968 ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்ட படியான 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 6 (1) (V) ம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர் உக்கு பண்டா வன்னிநாயக்கா ஆகிய நான், 1966 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, இலங்கை உல்லாசப் பிரயாணச் சபையின் விதந்துரையின் பேரில், முன்னே சொல்லப்பட்ட பிரிவினை கீழே குறிக்கப்பட்டுள்ள அட்டவணையின் ஒவ்வொர் முயற்சிகளுக்கும் பிரயோகிக்கப்படுமென்று வெளிப்படுத்துகின்றேன்.

யு. பி. வன்னிநாயக,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
9.3.1970

#### அட்டவணை

1. அஜிற் சிற்றியினுல் நடாத்தப்படும் ப்புளுலகூன் ஹொட்டேல், நிலாவெளி
2. யு. கே. எட்மெண்ட்டினுல் நடாத்தப்படும் மக்கலம் ஹொட்டேல், புறக்கோட்டை

4–598

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

எல். டீ. பீ. 7/63

## 1963 ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டம்

### 16 அ ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

1969 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் 16 அ ஆம் பிரிவின்படி எனக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சர், உக்கு பண்டா வன்னிநாயக்கா ஆகிய நான் 1970 மார்ச்சு 20 ஆந் தேதிய 14,898 இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1963 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க உள்நாட்டரசிறைச் சட்டத்தின் கீழுள்ள அறிவித்தல் அதன் அட்டவணையின் 1 ஆம் விடயத்திற்குப் பதிலாக பின்வரும் விடயத்தை பதிலீடு செய்வதால் இவ்வறிவித்தலின் மூலம் திருத்துகின்றேன்.

(1) " ஆனந்த வித்தியாலய அபிவிருத்தி நிதி ".

யு. பி. வன்னிநாயக்கா,
நிதி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 4 ந் உ.

4–481

---

ஈ/39/6/66

## இலங்கை (அரசியலமைப்பு) அரசவைக் கட்டளை, 1946

### 61 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசவைக் கட்டளையின் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் செய்யப் பட்டுள்ள கட்டளை.

டி. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிரில் மீ 4 ந் உ.

### கட்டளை இல. 195

1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசவைக் கட்டளையின் 61 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்டு, 1969, மார்ச்சு 28 ஆந் திகதிய, 14,847 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1969 பெப்பிரவரி 17 ஆந் திகதிய 187 ஆம் இலக்கக் கட்டளை, அதன் அட்டவணையின் II ஆம் நிரையில் பின்வருமாறு இத்தால் திருத்தப்பட்டுள்ளது :—

(அ) 1, 2, 3, 4, 5 ஆகிய விடயங்களில், " பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி (நிருவாகம்) " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " சிரேட்ட பிரதிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி " என்னும் சொற்களைச் சேர்த்தல் மூலமும் ;

(ஆ) 3 ஆம் விடயத்தில் " உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி " என்னும் சொற்களுக்கு நேரே முன்னதாக, " பிரதிக் கணக்காய் வாளர் தலைமை அதிபதிகள் " என்னும் சொற்களைச் சேர்த்தல் மூலமும் ;

(இ) 3 ஆம் விடயத்தில், " உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி " என்னும் சொற்களுக்குப் பதிலாக, " உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிகள் " என்னும் சொற்களைச் சேர்த்தல் மூலமும்.

4–549

---

ச. வ. ஓ. 50/37

## கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டம்

(124 ம் அத்தியாயமான) கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டத்தின் 57 ம் பிரிவின்கீழ் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு விவசாய, உணவு அமைச்சரினால் விடுக்கப்பட்ட கட்டளை.

எம். டி. பண்டா,
விவசாய, உணவு அமைச்சர்.

கொழும்பு 1,
1970 ம் ஆண்டு மார்ச் மீ 26 ந் உ.

### கட்டளை

(124 ம் அத்தியாயமான) கூட்டுறவுச் சங்கங்களின் கட்டளைச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்டு 1950 ஆம் ஆண்டு மார்ச் 24 ஆந் தேதியின் 10,086 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின் 37 வது விதியின் ஏற்பாடுகள் மட்டுப்படுத்தப் பட்ட வெலிகம் கோறளை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு " சங்கத்தின் பொதுக் கூட்டத்தினதும் பதிவாளரினதும் முன்னனுமதியில்லாது " என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக " பதி வாளரின் முன்னனுமதியில்லாது " என்னுஞ் சொற்கள் சேர்க்கப்பட்டிருந் தாற்போன்ற மாற்றத்துடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

4–505

---

ச. வ. ஓ. 50/37

## கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டம்

(124 ஆம் அத்தியாயமான) கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 57 ஆம் பிரிவினால் தனக்குரித்தாக்கப்பட்டிருக்கும் தத்துவத்தைப் பின்பற்றி உணவு விவசாய அமைச்சரினால் ஆக்கப்பட்ட கட்டளை.

எம். டி. பண்டா,
உணவு விவசாய அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு மார்ச்சு மீ 19 ந் உ.

### கட்டளை

1. (124 ஆம் அத்தியாயமான) கூட்டுறவுச் சங்கங்கள் கட்டளைச் சட்டத்தின் 32 (2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள், வரையறுக்கப்பட்ட மாத்தறை கந்தபொட பற்றுப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு ஏற்புடயனவாகமாட்டா.

4-469

---

## 1954ம் ஆண்டின் 37ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டம்

### 49ம் பிரிவின் கீழான சான்றிதழ்

1954ம் ஆண்டின் 37ம் இலக்க தேசிய வீடமைப்பு அதிகாரச் சட்டத்தின் 49ம் பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களின் படி, விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சர், மகாபாலாஹே தொன் ஹென்றி ஜயவர்த்தன ஆகியநான் மேற் கூறப்பட்ட அதிகாரச் சட்டத்தின் 2ம் பிரிவின் அடிப்படையில் வீடமைக்கும் நோக்கமாக இத்துடன் இணைக்கப் பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி அரசாங்கத்தினால் சுவீகரிக்கப் பட வேண்டும். என இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன்.

எம். டீ. எச். ஜயவர்த்தன,
விஞ்ஞான ஆராய்ச்சி
வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
1970, மார்ச்சு.

### அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்கு, யாழ்ப் பாணம், காரியாதிகாரிகளின் பிரிவினில் திருநெல்வேலி கோப்பாய் தெற்கு, கொண்டாவில் கிராம சேவகர்களின் பிரிவுகட்குள்ளே அமைந் துள்ள " குலன்குலி", "மாவிடியன்", எக்ககலம்புலம்" "மூல்லைக்கடை யடி" "கோறன்சாச்சி" , "கணக்கப்பன்" என்று அழைக்கப்படும் காணி களில் கிட்டத்தட்ட ஏ. 20 ரூ. 0. பே. 36 விஸ்தீரணமுள்ள ஒரு காணித் துண்டு.

அதன் எல்லைகள் பின்வருமாறு :—

வடக்கு — திருவாளர்கள். பீ சின்னராசா,
கே, இரத்தினசபாபதி, கே, இரத்தினம் ;
மற்றவர்களுக்கும் சொந்தமாயுள்ள ஆதனங்கள்

கிழக்கு :—இராஜபத்தி வீதி

தெற்கு :—திருவாளர்கள், என். கே. நல்லதம்பி, எஸ். தம்பிராசா, எஸ். கந்தையா, மற்றவர்களுக்கும் சொந்தமான ஆதனங்கள்

மேற்கு :—இந்தக் காணிகளின் மற்றைய பகுதி

4–472

## நொத்தாரிசு கட்டளைச் சட்டம் (107 ம் அதிகாரம்)

தங்காலை நீதிபரிபாலன ஆதிக்கத்துக்குள் ஆங்கில பாஷையில் நொத்தாரிசுவாகக் கடமை பார்க்க அனுமதி பெற்றுள்ள விமல் நிஸ்ஸங்க அபேசிங்க வீரவிக்ரமசூரிய அவர்கள், 107 ம் அத்தியாயமான நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 22 (1 ம்) பிரிவின் கீழ் 1969 ஆம் செப்டம்பர் மாதம் 1 ம் திகதி தொடக்கம் நொத்தாரிசு பதவியிலிருந்து ராஜினுமாச் செய்வதாக அனுப்பிய கடிதம், கௌரவ உள்நாட்டு விவகார அமைச்சரவர்களால் மேற்படி திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப் பட்டது.

4-506

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47(2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1969 சனவரி 13 ஆந் தேதிய 14,836/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப் பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(1), 3(8), 4(1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர் மொஹமது ஹனிபா மஹ்மூது நெயினு மரிக்கார் ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3(2) ஆம் பிரிவின் கீழ் 1968 நொவெம்பர் 22 ஆந் தேதிய 14,829 ஆம் இலக்க கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 6 ஆம் இலக்கத்தில் விபரிக் கப்பட்ட எப்பாவளைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பின ராக நியமிக்கின்றேன் :—

1. எப்பாவளை, எலியதிவுல்வீவவைச் சேர்ந்த திரு. திசநாயக உக்குபண்டாகே டிகிரிபண்டா.
2. எப்பாவளையைச் சேர்ந்த திரு. உக்குபண்டா திசாநாயக.
3. மகவிலுப்பள்ளமை கெலேதிவுல்வீவவைச் சேர்ந்த திரு. கே. பி. திசாநாயக.
4. மகவிலுப்பள்ளமை கல்மடுவைச் சேர்ந்த திரு. டிகிரிபண்டா திசாநாயக.
5. மகவிலுப்பள்ளமை அழுத்வீவவைச் சேர்ந்த திரு. கேரத் முதியன்சேலாகே ரண்பண்டா.
6. மகவிலுப்பள்ளமை, பொத்தேகமையைச் சேர்ந்த திரு. திசாநாயகே கேரத்காமிகே டிகிரிபண்டா.
7. எப்பாவளை, இகலகல்மில்லேவையைச் சேர்ந்த திரு. கிரி காமி திசாநாயக.
8. எப்பாவளை, இகலகல்மில்லேவையைச் சேர்ந்த திரு. திசா நாயக தேவகாமிகே கிரிகாமி.
9. எப்பாவளை ரஜ்ஜல்லேகமையைச் சேர்ந்த திரு. திசாநாயக கபுறுகாமிகே டிகிரிபண்டா.
10. எப்பாவளை கெலேசியம்பலாவையைச் சேர்ந்த திரு. திசா நாயககே தேவகாமிகே அமரசேன.
11. எப்பாவளை, கெலேசியம்பலாவயைச் சேர்ந்த திரு. கொளம் பகே டொன் ஜஸ்டின் பிரேமசந்திர.
12. எப்பாவளை, எலியதிவுல்வீவவைச் சேர்ந்த திரு. திசா நாயக கவுருலகே கேரத் பண்டா.
13. எப்பாவளை, பலுகஸ்வீவவைச் சேர்ந்த திரு. முதியன்சேகே டிகிரிபண்டா வன்னிநாயக
14. தலாவை, கதுறுகஸ்வீவயைச் சேர்ந்த திரு. கபுருலகே பத்தருல.
15. எப்பாவளை, கெற்றதிவுலேயைச் சேர்ந்த திரு. பிநாகே ஜுவானிஸ் சோமசிறி சிறிவர்தன.
16. எப்பாவளை கட்டியாவைச் சந்தியைச் சேர்ந்த திரு. டிகிரிபண்டா இலங்கசிங்க.
17. எப்பாவளை, நல்லமுதாவையைச் சேர்ந்த திரு. கொரத் முதியன்சேலாகே மெனிக்ராலை.
18. எப்பாவளையைச் சேர்ந்த திரு. கோத்பண்டா ராஜகருண.
19. எப்பாவளை அமுணுகலேயைச் சேர்ந்த திரு. நங்காமிகே கிரிகாமி.
20. எப்பாவளை எலியதில்வீவவைச் சேர்ந்த திரு. ரங்காமிகே நன்காமி.
21. அனுராதபுரம் பகலகல்மில்லாவையைச் சேர்ந்த திரு. உக்குபண்டாகே கிரிகாமி.
22. எப்பாவளை மெதியாவையைச் சேர்ந்த திரு. சுத்தகாமிகே டிகிரிபண்டா.
23. எப்பாவளை கெலே அமுணுகொலேயைச் சேர்ந்த திரு. கபுறுகாமிகே பிங்காமி.
24. எப்பாவளை, மாவதவீவவைச் சேர்ந்த திரு. டிங்கிரி அப்புகே கமுபண்டா.
25. எப்பாவளை கொன்வீவவைச் சேர்ந்த திரு. முதியன்சேகே ரசொல்காமி.

(ஆ) எப்பாவளை, எலியதிவுல்வீவவைச் சேர்ந்த திசாநாயக உக்கு பண்டாகே டகிரிபண்டா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராக விருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கிறேன்.

எம். எ. எம். நேயினு மரிக்கார்,
நீதி அமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு, கொழும்பு,
1970 ம் ஆண்டு எப்பிரல் மீ 7 ந் உ.

461/1

---

## இணக்கச் சபைகள் சட்டம்

### கட்டளை

1959 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்ட வாறுள்ள, 1946 ஆம் ஆண்டின் இலங்கை (அரசியலமைப்பு) அரசப் பேரவைக் கட்டளையின் 47 (2) ஆம் பிரிவின் கீழாக்கப்பட்டு, 1969 சனவரி 13 ஆந் தேதிய 14,836/3 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப் பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சரினுல் பாராளுமன்றச் செயலாளர் மொஹமது ஹனிபா மஹ்மூது நெயினு மரிக்கார் ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1969 யூலை 4 ஆந் தேதி 14,861 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற் கான அட்டவணையில் 6 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட உடு நுவர மெத பலாத வடக்குக் கிராமப் பகுதிக்கென அமைக்கப் பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப் பினராக நியமிக்கின்றேன் :—

1. பிளிமத்தளாவை, பமுணுவையைச் சேர்ந்த அந்திரிஸ் அவர்கள்.
2. பிளிமத்தளாவை, கேபாஊயைச் சேர்ந்த கணிதகெதர வைத்திதாச அவர்கள்.
3. பிளிமத்தளாவை, கேபாஊயைச் சேர்ந்த கீர்த்தி லெம் பெட் வீரசேகர அவர்கள்.
4. பிளிமத்தளாவை, கேபாஊயைச் சேர்ந்த பள்ளேகெதர தனபால அவர்கள்.
5. பிளிமத்தளாவை, கேபாஊயைச் சேர்ந்த பள்ளேகெதர வில்லியம் அவர்கள்.
6. பிளிமத்தளாவை, கிரிவவுலேயைச் சேர்ந்த மெனிக்போவே சகலவல்லி பட்டபெந்தி தர்மதாச அவர்கள்.
7. கந்தெசை, அம்பெக்கையைச் சேர்ந்த ஜலயத் முதியஞ்செலாகே ஜயதிலக பண்டா அவர்கள்.
8. கந்தெசை, அம்பெக்கையைச் சேர்ந்த தேவசுரேந்திர கெதர தயானந்த அவர்கள்.
9. கந்தெசை, அம்பெக்கையைச் சேர்ந்த கங்காணிகெதர புஞ்சிராலை அவர்கள்.
10. கந்தெசை, சியம்பலாகொடையைச் சேர்ந்த சியம்பலா கொட வளவ்வே புஞ்சி பண்டார வரகாகொட அவர்கள்.
11. கந்தெசை, யேவலேயைச் சேர்ந்த தெலிவல அம்பேகொட கெதர குனேலிஸ் அவர்கள்.

12. கந்தெசை, வல்கமையைச் சேர்ந்த கேரத் முதியஞ்செலா செனவிரத்தின பண்டா அவர்கள்.
13. கந்தெசை, வல்கமையைச் சேர்ந்த வல்கம ஆராச்சிலா கெதர ஜயரத்தின பண்டா அவர்கள்.
14. கந்தெசை, கியவளையைச் சேர்ந்த அம்பேகொடகெதர எலியெஸ் அவர்கள்.
15. கந்தெசை, கியவளையைச் சேர்ந்த முதுவத்தே கெதர முனசிங்க அவர்கள்.
16. கந்தெசை, இம்புல்தெனியைச் சேர்ந்த ரத்னாயக்க முதியஞ்சேலாகே முதியஞ்சே அவர்கள்.
17. கந்தெசை, இம்புல்தெனியைச் சேர்ந்த போதிகொட்டுவே ராஞ்சுருமுதியஞ்செலாகே விஜேரத்தின அவர்கள்.
18. கந்தெசை, திறப்புவையைச் சேர்ந்த கமகெதர முதியஞ்சே அவர்கள்.
19. கந்தெசை, இம்புல்தெனியைச் சேர்ந்த அபேசிங்க பண்டார இம்புல்தெனிய அவர்கள்.
20. கந்தெசை, இம்புல்தெனியைச் சேர்ந்த ஜயதிலக பண்டார இம்புல்தெனிய அவர்கள்.
21. கந்தெசை, இம்புல்தெனியைச் சேர்ந்த பத்தனமுதியஞ் சேலாகே ரிகிரிபண்டா அவர்கள்.
22. கந்தெசை, இம்புல்தெனியைச் சேர்ந்த கேரத் முதியஞ்செலாகே ரம்பண்டா அவர்கள்.
23. பிளிமத்தளாவை, கலாதிவெளியைச் சேர்ந்த கெலம்பகே தொன் பியதிஸ்ஸ அப்புகாமி அவர்கள்.
24. கந்தெசை, கித்தவுல்லையைச் சேர்ந்த திசாநாயக்க முதியஞ் சேலாகே மிதுருகாமி திசாநாயக்க அவர்கள்.
25. கந்தெசை, கித்தவுல்லையைச் சேர்ந்த மகாகம்மகலாகே கெதர செனவிரத்தின அவர்கள்.
26. பிளிமத்தளாவை, பமுணுவையைச் சேர்ந்த பீ. எம். ஜயசுந்தர அவர்கள்.
27. பிளிமத்தளாவை, பமுணுவையைச் சேர்ந்த கல்பொத்தா கொட கெதர பியசேன அவர்கள்.
28. பிளிமத்தளாவை, பமுணுவையைச் சேர்ந்த அம்பேகொட கெதர விஜேதுங்க அவர்கள்.
29. பிளிமத்தளாவை, பீலிகமையைச் சேர்ந்த றைகம் ஆச்சாரிகே நந்தசேன அவர்கள்.
30. பிளிமத்தளாவை, பீலிகமையைச் சேர்ந்த ஏ. எம். எம். பீ. ஏகநாயக்க அவர்கள்.
31. கந்தெசை, றப்பேகமுவையைச் சேர்ந்த கலகொட்டுவே மாரசிங்க பேடிகெயர மாரசிங்க அவர்கள்.
32. கந்தெசை, றம்பேகமுவையைச் சேர்ந்த மொறகஹகும்புரே கெதர வீரசிங்க அவர்கள்.
33. கந்தெசை, றப்பேகமுவையைச் சேர்ந்த நவரத்தின பதிரணலாகே வீரசிங்க அவர்கள்.
34. கந்தெசை, றப்பேகமுவையைச் சேர்ந்த உடுநுவர றப்பேகமுவை போல் அவர்கள்.
35. கந்தெசை, தெலிவளையைச் சேர்ந்த அம்பேகொடகெதர பேமானிஸ் அவர்கள்.
36. கந்தெசை, தெலிவளையைச் சேர்ந்த தெரிவான கல்பொத்தேகெதர தந்துவா அவர்கள்.
37. கந்தெசை, தெலிவாணையைச் சேர்ந்த தெலிவான சியம்பலாவேகெதர கிரிபண்டியா அவர்கள்.
38. கந்தெசை, கியாராபிட்டியைச் சேர்ந்த விதானலேகெதர குமுது சுமணதாச அவர்கள்.
39. கந்தெசை, கியாராபிட்டியைச் சேர்ந்த கேரத் முதியஞ்செலாகே சோமரத்தின அவர்கள்.
40. கந்தெசை, கியாராபிட்டியைச் சேர்ந்த போதிகொட்டுவே துக்கன்னு ராலலாகே புஞ்சிரத்ன சமரக்கொடி அவர்கள்.
41. பிளிமத்தளாவை, கக்குல்தெனியைச் சேர்ந்த ராஜபக்ச கெதர கலுதுரயா அவர்கள்.
42. கந்தெசை, றம்பேகமுவையைச் சேர்ந்த நவரத்தின பதிரனலாகே வீரதுங்க அவர்கள்.

(ஆ) பிலிமத்தளாவை, பமுணுவையைச் சேர்ந்த அந்திரிஸ் ஜயசிங்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்.

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கஸெட்டில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாக வேண்டுமெனவும் நிச்சயிக்கிறேன்.

எம். எச். எம். நெயினா மரிக்கார்,
நீதிஅமைச்சரின் பாராளுமன்றச் செயலாளர்.

நீதி அமைச்சு, கொழும்பு,
1970 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 7 ந உ.

461/2

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பிரகடனம்

யாழ்ப்பாணப்பரிபாலன மாவட்டத்தில் துனுக்காய் கிராமசபைக்குட்பட்ட முழுப் பகுதியையும் இவ்வறிவித்தல் திகதியிலிருந்து ஆறு மாத காலத்திற்கு விசர் நாய்ச்சட்டம் 476 ம் அத்தியாயத்தின் 11 ம் பிரிவின் கீழ் இத்தால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

2. மேற்குறிப்பிட்டுள்ள பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பகுதியில் நாய் யாருக்குச் சொந்தமான கட்டிடம், காணி, அல்லது தோட்டம் தவிர்ந்த ஏதாவது ஒரு பொது இடத்திலோ அல்லது வீதியிலோ எந்த நாயாவது கட்டப்படாமலோ காணப்பட்டால் அது உடனடியாக அழிக்கப்படவேண்டியதாகும்.

எவ். சீ. பீற்றேர்ஸ்,
யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
யாழ்ப்பாணம்,
1970 எப்பிரல் 2 ம் திகதி.

4–501

---

## இலங்கை அரசாங்க புகையிரதப் பகுதி

### புகையிரதக் கடவைத் திருத்த வேலைகள்

கந்தான–ஜாஎல புகையிரத நிலையங்களுக்கிடையில் புத்தளம் புகையிரதப் பாதையில் வெலிகம்பிட்டிய–கனேமுல்ல (பட்டகம வழியினூடாக) வீதியில் 12 மைல் 41 சாங்கிலி 45 பாகம் தூரத்தில் உள்ள புகையிரதக் கடவையினூடாக வாகனப் போக்குவரத்துக்கள் பூரணமாக இல்லாது 27.4.70 திங்கட்கிழமை காலை 7.00 மணிமுதல் இரவு 7.00 மணிவரை தடை செய்யப்படும். அத்துடன் திருத்த வேலைகள் பாதிக்கப்படாதிருக்கும் பொருட்டு 27.4.70 திங்கட்கிழமை இரவு 7.00 மணிமுதல் 28.4.70 காலை 7.00 மணி வரை போக்குவரத்துக்கள் முற்றுகத்தடை செய்யப்படும்.

இவ்வேளையில் வாகனப் போக்குவரத்துக்கள் ரிலஉல்ல–பட்டகம (வடக்கு) வழியாக ஜாஎல–கனேமுல்ல நிவந்தம பாதையினூடாகத் திருப்பப்படும்.

ஜே. போல் சேனரத்ன,
பிரதான புகையிரத அதிபருக்காக.

4–459

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

**அட்டவணை—1970**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஏப்பிறல் | 3.4.70 | வெள்ளி | 25.3.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 10.4.70 | வெள்ளி | 3.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 17.4.70 | வெள்ளி | 8.4.70 | புதன் | பி. ப. 3.30 |
| | 24.4.70 | வெள்ளி | 17.4.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 30.4.70 | வியாழன் | 23.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| மே | 8.5.70 | வெள்ளி | 30.4.70 | வியாழன் | பி. ப. 3.30 |
| | 15.5.70 | வெள்ளி | 8.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 22.5.70 | வெள்ளி | 15.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 29.5.70 | வெள்ளி | 22.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| யூன் | 5.6.70 | வெள்ளி | 29.5.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 11.6.70 | வியாழன் | 5.6.70 | வெள்ளி | பி. ப. 3.30 |
| | 18.6.70 | வியாழன் | 11.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |
| | 25.6.70 | வியாழன் | 18.6.70 | வியாழன் | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.